வராது என்று தெரிவித்த காரணத்தால் இப்போது கைவிடப் பட்டிருக்கிறது. எனவே அங்கேயிருக்கின்ற நிலைமைகளைச் சட்டமன்ற உறுப்பினர் பார்த்து அது உண்மைதானா என்பதைத் தெரிந்து கடிதம் கொடுத்தால் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கலாம்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தமிழில் ஒளிபரப்பு செய்தல்.

105—(*வினா எண் 203)—திரு. மா. சின்னராசு: மாண்புமிகு, சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் தொலைக் காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்புக்கு ஏற்பாடு செய்யும்படி மத்திய அரசைத் தமிழக அரசு கேட்டுக்கொண்டுள்ளதா ?

(ஆ) இதன் மீது மத்திய அரசு நடவடிக்கை குறித்து தகவல் ஏதும் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டில் உள்ள எல்லா குறைந்த சக்தி கொண்ட தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் அனைத்தையும் சென்னை தொலைக்காட்சி நிலையத்துடன் மைக்ரோ வேவ் மூலம் இணைக்க வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கோரியுள்ளது. தற்போது கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையம் சென்னை தொலைக்காட்சி நிலையத்துடன் மைக்ரோ வேவ் மூலம் இணைக் கப்பட்டுள்ளது.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் நீலகிரி போன்ற மாவட்டங்களில் சென்னை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்க்க முடியாத நிலை இருக்கிறது. இது போன்ற மைக்ரோ வேவ் மூலம் இணைக்கப் படாத மாவட்டங்களை மைக்ரோவேவ் மூலம் இணைக்க வேண்டும் என்று வலியுறுத்துவதோடு சென்னையில் ஒளிபரப்பப் படும் தமிழ் நிகழ்ச்சிகளை தமிழக மக்கள் பார்க்க வசதி ஏற் படுத்திக் கொடுக்க மத்திய அரசாங்கத்தை மாநில அரசாங்கம் வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1987 நவம்பர் 13]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, மைக்ரோவேவுடன் இதுவரையில் ஏற்படுத்தப் பட்டிருக்கின்ற எல்லா டிரான்ஸ்மிட்டர்களையும் இணைக்க வேண்டுமென்று மைய அரசுக்கு ஏற்கெனவே மாநில அரசு எழுதி யிருக்கிறது. விரைவிலே நடவடிக்கை எடுக்கச் சொல்லி வலி யுறுத்தும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழைக்கும் மக்கள் ஏழு எட்டு மணிக்குமேல்தான் வீட்டிற்குத் திரும்பி வருவார்கள். அவர்கள் 9 மணிக்கு மேல் எந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் பார்க்க முடிவதில்லை. ஆகவே 9 மணிக்கு மேலும் தொடர்ந்து தமிழக மக்கள் தங்கள் தாய்மொழி தமிழில் நிகழ்ச்சிகளைக் காண்பதற்கு—எப்படி மத்திய அரசாங்கம் தன்னுடைய கொள்கைகளை, திட்டங்களை மக்களுக்குப் பரப்ப தொலைக்காட்சியைப் பயன்படுத்துகிறதோ அதைப் போல—மாநில அரசாங்கம் தன்னுடைய திட்டங் களை, கொள்கைகளை மக்களுக்குப் பரப்புவதற்கேற்ப ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு சில மணி நேரமாவது மாநில அரசாங்கத்தின் நிகழ்ச்சிகளை நாமே ஒளி பரப்ப அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நேரத்தை ஒதுக்குவதில்கூட தமிழ் நிகழ்ச்சிகளுக்கு அதிகமான நேரம் ஒதுக்க வேண்டும் என்று மைய அரசின் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் நேரிலும், கடிதம் மூலமும் இந்த அரசு வலியுறுத்தி இருக்கிறது, இரண்டாவது சேனல் வருகிறபோது தமிழ்நாட்டிற்கு அதைக் கொடுத்தால் அதில் தமிழ் நிகழ்ச்சிகளை அதிக நேரம் ஒளிபரப்ப சாதகமாக இருக்கும் என்ற கருத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூலம் மைய அரசுக்கு எழுதியிருக்கிறோம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கிற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் சுமார் 80 சதவீதம் தமிழ் அல்லாத நிகழ்ச்சிகள், செய்திகள் நிரம்ப இருக்கின்றன. காலையிலே டி.வி.யை வைத்தால் தமிழில் இருப்பதில்லை, மற்ற நிகழ்ச்சிகள்தான் இருக் கின்றன. ஆகவே தமிழ் நிகழ்ச்சிகள் எந்த அளவிற்கு இருக்க வேண்டும், மத்திய அரசின் நிகழ்ச்சிகள் எப்போது இருக்க வேண் டும் என்று வரையறுத்துக்கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் வழிவகை செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு கேட்ட அதே கேள்வியைத்தான் மீண்டும் கேட்கிறார்கள். தொடர்ந்து இப்போதுள்ள நேரத்தில் அதிகம் தமிழ் நிகழ்ச்சிக்கு ஒதுக்க வேண்டுமென்று மைய அரசுக்கு மாநில அரசு கடிதம் மூலமும் நேரிடையேயும் வலியுறுத்தி வருகிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சியில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்களது தொகுதிக்கு ஆற்றியுள்ள பணிகளைத் தெரிவிக்கின்ற வகையிலும் மக்களும் தெரிந்து கொள்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா ? இன்றைக்கு கிரிக்கெட் விளையாட்டை நேரிடையாக ஒளிபரப்புகிறார்கள். அது மிக ஆற்புதமாக மக்கள் மத்தியிலே வரவேற்கப்படுகிறது. முக்கியமாக மக்களுக்காக பணியாற்றுகின்ற சட்டமன்ற நடவடிக்கைகளை நேரிடையாக ஒளிபரப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி சம்பந்தப்பட்ட தொலைக்காட்சித் துறை அமைச்சரிடம் கருத்து தெரிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப் படும்.

பாலாடைக்கட்டி தொழிற்சாலை.

106—(*வினா எண் 5284)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலாடைக் கட்டி தொழிற்சாலை நிறுவ அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு செலவில் எப்போது நிறுவப் படும் ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) ஆம்.